2010 நவம்பர் 10]

திருப்பூர் மாவட்டத்தில் வெள்ளக்கோவிலில் ஒரு மாணவியர் விடுதி துவக்கப்பட்டுள்ளது. இங்கு அதிகமான ஆதி திராவிட மாணவியர்கள் பயின்றுவருகின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வருகின்ற ஆண்டில் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கட்டட வசதி

***120753—திரு. செ. பொன்னுதுரை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், சின்னேகவுண்டன்வலசு ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், சின்னேகவுண்டன்வலசு ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடம் கட்டுவதற்கு நிதி ஆதாரம் தற்போது இல்லாத காரணத்தால் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் நிச்சயமாக கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.*

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், சின்னேகவுண்டன்பாளையம் கிராமம் விவசாயிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் உப தொழிலாக ஆடு, மாடு, கோழி வளர்த்து வருகிறார்கள். 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே அங்கே பால் உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, அந்தச் சங்கம் 142 உறுப்பினர்களைக் கொண்டு, தினந்தோறும் 350 லிட்டர் பால் உற்பத்தி செய்துவருகிறது. பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்த இடம் உள்ளது. பால் உற்பத்தியாளர் சங்க நலன் கருதி, அவர்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில்தான் 16-9-1999 ஆம் ஆண்டு 4 சென்ட் நிலம் சொந்தமாக வாங்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், கட்டடம் கட்டி முடிக்கவேண்டுமென்பதற்காக இலாபத்தில் ஆண்டிற்கு 10 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்து இன்றைக்கு 1,36,863/- ரூபாய் பணம் இருக்கிறது. ஆனால் அந்தத் தொகையினை வைத்து கட்டடம் கட்டுவதற்குத் தற்போது வாய்ப்பில்லாத காரணத்தால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த அளவிற்கு உரிமையோடு கேட்கின்ற நேரத்தில் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தருவார்களேயானால் நிச்சயமாக கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதியில் 84 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இயங்குகின்றன. அதற்கு 15 சங்கங்களுக்குத்தான் சொந்தக் கட்டடம் உள்ளது. இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்

2010 நவம்பர் 10]

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு ஊர்களுக்கு, பால் சொசைட்டி கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கித் தந்திருக்கிறேன். அதில், கரண்டிபாளையம், பல்லவளை, சேடர்பாளையத்தைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர் சொசைட்டிக்கு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பகுதியிலே மேலும் வேட்டையங்கிணறு, நசியனூர், நெசையூர்தயிர்பாளையம், பழனிகவுண்டன்பாளையம், சேலம்பட்டி போன்ற மிச்சமுள்ள 69 சங்கங்களுக்கும் அரசாங்கம் சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், ஈரோடு பால்வள ஒன்றியத்தில் 725 சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்தச் சங்கத்திற்கு ஈரோடு பால் வள ஒன்றியத்தின்மூலமாக மாட்டுத் தீவனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த மாட்டுத் தீவனங்களில் 60 கிலோ எடை கொண்ட மூட்டை 492 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஆனால், இப்போது Fibre Protein என்று சொல்லி 60 கிலோ மாட்டுத் தீவனம் 966 ரூபாய்க்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பால் உற்பத்தியாளர்கள், பால் உற்பத்தி செய்ய மாட்டுத் தீவனங்கள் வாங்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். சங்க உறுப்பினர்கள் நலன் கருதி எஸ்.ஆர்.எம். என்ற தீவனத்தை, 492 ரூபாய்க்கு, அந்தச் சங்கத்திற்கு வழங்கி அந்த விவசாயிகளை வாழ வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசை தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்டுத் தீவனத்தைப் பொறுத்த அளவு மற்ற மாநிலங்களைவிடவும், தனியாரை விடவும் குறைந்த விலையில்தான், மானிய விலையில் கொடுக்காவிட்டாலும்கூட, மானிய விலைக்கு சமமான விலையில்தான் பால் வளத் துறை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஈரோட்டினைப் பொறுத்த வரையில் தீவனத்தினுடைய விலை—பழைய விலையைப் பொறுத்த அளவு—இன்றைக்கு மாறுபட்ட சத்து அதிகமாக உள்ள நல்ல தீவனம் வழங்கப்படுவதனால் அந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஆனால்,

EGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தனியார் துறையைவிட, மற்ற மாநிலங்களைவிட குறைந்த விலைக்குத்தான் பால் உற்பத்தியாளர்களுக்குத் தீவனம் வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

11—

காவலர் குடியிருப்பு

***45066—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி நகரில் காவலர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2008-2009 ஆம் ஆண்டில் பழனி நகரில் பணிபுரியும் காவலர்களுக்கு 32 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசாணை 18-11-2008-ல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதிக்கு கடந்த 4½ ஆண்டுகளில் பழனி நகரக் காவல் நிலையத்தை முதல்தர காவல் நிலையமாகத் தரம் உயர்த்தி, புதிய கட்டடம் கட்ட ரூ.35 இலட்சம் வழங்கி, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் நிலையில் உள்ளது. தாலுகா காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ரூ.42 இலட்சம் அனுமதி வழங்கி கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.